**தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்**

-------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 329 - தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5. ஏனைய சட்ட மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட பதிவேட்டின் பிரகாரம், ரூபா 533 மில்லியன் தொகையான கட்டுநிதி மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் திணைக்களத்தால் திட்டமிடப்பட்ட கட்டுநிதி மதிப்பீட்டை விஞ்சி ரூபா 72.44 மில்லியன் கட்டுநிதி கோரப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டது. எதிர்காலத்தில் சரியாக கட்டுநிதி கோரிக்கையை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. | திணைக்களத்தின் கடமைகளை பூர்த்திசெய்வதற்காக வழங்கப்பட்ட ஏற்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக கட்டுநிதி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவீன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| **(அ) விளைவற்ற ஏற்பாட்டுப் பயன்பாடு** | | |
| 02 மீண்டுவரும்செலவீன விடயங்கள் மற்றும் மூலதன விடயங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 2,050,000 தொகையான மொத்த ஏற்பாடானது அதனைப் பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிந்தது. | கொவிட் 19 பரம்பல் நிலமையால் அமைச்சர்கள் அலுவலகத்தின் அமைச்சரவை செயலாளரின் 2021.08.21 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அதே மொத்தத் தொகையை சேமிப்பதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மற்றும் உள்ளபடியான செலவீன மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திறைசேரித்திணைக்களத்திற்கான சம்பளங்களை தயாரிப்பதற்காக புதிய கணனி முறைமையினை (E-Payroll) தயாரித்தலிற்கான இறுதிக் கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டுக்கள் 2021.12.31 இல் உள்ளவாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | |
| **(ஆ) மேலதிக ஏற்பாடுகளை மேற்கொள்ளல்** | | |
| 04 மீண்டுவருஞ் செலவீனங்கள் மற்றும் 02 மூலதனச் செலவீனங்களிற்காக ரூபா 476,952,400 தொகையான மேலதிக ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 251,827,185 மொத்தத்தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 225,125,215 மொத்த ஏற்பாடு மீதமாகவிருந்தது. ஒவ்வொரு செலவீன விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட தேறிய ஏற்பாடுகளின் அதே சேமிப்பு 14 சதவீதத்திலிருந்து 96 சதவீத வீச்சிலிருந்தது. | போக்குவரத்துப் படிகளுக்கு தகுதியுள்ள பதவிகள் வெற்றிடமாகவிருந்தமையால், அமைச்சரவைகள் செயலாளரின் 2021.08.21 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஏற்பாடுகள் இரத்துசெய்யப்பட்டமையால் மற்றும் ITMIS செயற்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட கம்பனிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட கடமைகள் மற்றும் மதிப்பீடுகள் மாறியமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மற்றும் உள்ளபடியான செலவீன மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| **(இ) பௌதீகச் சொத்துக்களினை நிர்மாணித்தல் மற்றும் கொள்வனவு செய்தல்** | | |
| ரூபா 2,855,549 பெறுமதியான பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணம் மற்றும் கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளின் சுவீகரிப்பானது 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காள காசுப்பாய்ச்சல்க்கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்ல் கூற்றின் கீழ் | மூலதன விடயங்களின் கீழ் திறன் மேம்பாட்டிற்காக ரூபா 639,800 தொகை ஒதுக்கப்பட்டமையால் அச் செலவீனம் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் “ பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளின் சுவீகரிப்பு” கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பௌதீகச் சொத்துக்களின் சுவீகரிப்பாக நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட செலவீனம் நிதிநிலமைக்கூற்றிலுள்ள நிதிசார் மற்றும் நிதியல்லாத சொத்துக்களின் கீழுள்ள கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. |

காட்டப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டிற்காக அதே பெறுமதி ரூபா 2,215,749 ஆக காட்டப்பட்டமையால் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 639,800 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புககளை ஏற்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 1,108,133 தொகையான மொத்தச் செலவீனம் 2022 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதே செலவீனம் 2021 ஆம் ஆண்டில் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுடன் தொடர்புடைய தொலைபேசிச் சிட்டைகள், 1/3 படிகள் மற்றும் பதிலீட்டு படிகள் மற்றும் படிகளினை கணிப்பிடுதல் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்டமையால் அவைகள் 2022 ஆம் ஆண்டின் ஏற்பாடுகளினால் செலுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் முறையாக உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள் , விதிகள் , மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இடையிலான தொடர்பு | இணங்காமை | | |
| ------------------ | ---------------------- | -------------------------- | ------------------------- |
| (அ) பொது கணக்குகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் வழிகாட்டியின் 06 ஆம் பந்தி | காசுப்பாய்ச்ல்க்கூற்றைத் தயாரிக்கும் போது காசு மற்றும் குறுக்கு பதிவு அதற்கு முரணாக கருதப்பட வேண்டியதுடன் பெறுகைகளின் பெறுமதி மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவு காசுப்பாய்ச்சலில் ரூபா 1,589,195 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டது. எதிர்காலத்தில் இதனை சரியாக மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. | பொது கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 880 | பிணைகள் கொடுக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணைகளை கொடுத்திருக்கவில்லை. | பிணைகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

# 3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

## 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டை முடியாமை

----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| (அ) திறைசேரியின் திணைக்களத்திலுள்ள சம்பள கொடுப்பனவு முறைமையை விரிவாக்கும் விதத்தில் ஈ-பேரோல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. | செயற்பாட்டு அறவீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டதுடன் பொது கணக்குகள் திணைக்களத்தின் | செயல்நடவடிக்கைத்திட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| எனினும், அவ் முறைமையை திணைக்களங்களில் நேரடியாக செயற்படுத்துவதன் மூலம் அதே நோக்கங்களை 2022 மே 12 அளவிலும் அடைந்திருக்க முடிந்திருக்கவில்லை. | சிபாரிசினைப் பெற்ற உடனே தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் முறைமை அபிவிருத்தி நிறுவனங்களுக்குகிடையில் சொல்லப்பட்ட அறவீட்டு அறிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.<br>அதற்கு மேலதிகமாக, மேலே குறிப்பிடப்பட்ட பொது கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையைப் பெற்ற பின்னர் செயற்படுத்த வேண்டிய அத்தியாவசிய விடயமாகவுள்ள பாதுகாப்பு கணக்காய்வு மற்றும் பாதிப்பு மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக எஸ்எல்சீஈஆர்ரீயின் பரீட்சிப்பு அறிக்கை அடுத்த கிழமையில் பெறுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தால் நேரடிச் செயற்பாட்டு ஆரம்பித்திருக்க முடியும். | |
| (ஆ) முறைமையில் பூர்த்தி பரீட்சையை மேற்கொள்வதற்காக இறுதியில் ஆரம்ப செயற்பாடாக இலவச வரி வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அரச உத்தியோகத்தர்களால் விண்ணப்பங்களை இணையத்தளத்தில் சமர்ப்பிப்பதற்காக முறைமையின் இறுதிப் பரீட்சையை மேற்கொள்வதற்கும் புதிய அபிவிருத்தியை மேற்கொள்வதும் முதன்மையான நிலமையாக கருதப்பட்டமையால் நிதி அமைச்சிலுள்ள பல திணைக்களங்களில் இந்த முறைமையை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது.<br>முறைமையில் இறுதிப்பரீட்சிப்பை எனினும்,இது 2022 மே 12 வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அத்தகைய வாகன உரிமைப்பத்திரங்களை வழங்கும் முழுமையான செய்முறையானது இணைய முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென வியாபாரத் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம் மற்றும் எங்களுடைய திணைக்களத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கலந்துரையாடல்களீல் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கிணங்க அதற்காக பிரத்தியமாக சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் சரியான தன்மை மற்றும் செல்லுபடி தன்மையை பரீட்சிக்கும் வகையில் முறைமை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.<br><br>இந்த நேரத்தில், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் போலித் | முறைமையிலுள்ள ஏனைய தொகுதிகள் அமைச்சு மற்றும் திணைக்களங்களில் உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதுடன் அமுல்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தரவைப் (Dummy Data) பயன்படுத்தி அபிவிருத்திசெய்யப்பட்ட முறைமையை அமுல்படுத்தி பரீட்சிக்கப்பட்டது. ஏனைய தொகுதிகளை அபிவிருத்தி செய்தபின்னர் அமைச்சிலுள்ள பல திணைக்களங்களிலும் முறைமையை அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப்படுத்தப்பட்டது. | |
| (இ) நிலையான முறைமை அபிவிருத்தி செய்முறை நிதி அமைச்சின் போக்குவரத்து முறைமையின் அபிவிருத்திக்காக செயற்பாட்டிலிலுள்ள நிலைமையில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதே முறைமை 2022 மே இலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | போக்குவரத்துப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலின் பிரகாரம், உரிய தகவல் முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டு தாபிக்கப்பட்டது. அதற்கிணங்க, தற்போது இவ் முறைமை செயற்பாட்டிலிருந்த போதும் இந்த தகவல் முறைமையில் தரவினை செலுத்துதல் போக்குவரத்துப் பிரிவால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத்தி ட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும. |

## 4 மனித வளங்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திலுள்ள 58 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 13 பதவிகள் வெற்றிடமாகவிருந்தது. அத்தகைய வெற்றிடங்களில் 06 சிரேஸ்ட மட்ட பதவிகளில் வெற்றிடமிருந்தது. | பணிப்பாளர் பதவியில் (எஸ்எல்ஏஎஸ்) இருந்த வெற்றிடம் 2022.05.23 இல் நிரப்பப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் கடமைகளிற்கு தேவையான உத்தியோகத்தர்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தேவையற்ற பதவியணிகளிற்காக முறையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரதி பணிப்பாளர் பதவிக்காக (இலங்கை கணக்காளர் சேவை) பதிலீட்டு நியமனம் 2021 சனவரி 12 இலிருந்து 2022 சனவரி 11 வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொது சேவைகள் ஆணைக்குழுவின் 2021.02.06 ஆந் திகதிய ஜரீஎம்/01/02/01/003 ஆம் இலக்க கடிதம் மறறும் 2021.12.08 ஆந் திகதிய | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தபோதிலும், தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர் மேற்கூறப்பட்ட பதவிக்காக நிரந்தர அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்காப போதும் 2022 சனவரி 12 இற்குப் பின்னர் பொது சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பதிலீட்டுப் பதவிக்காக 2022 மே 12 இலும் பெறப்பட்டிருக்கவில்லை. | எம்எவ்ஜ/0/03/எஸ்எல்ஏசீஎஸ்/டீரீஎம் ஆம் இலக்க கடிதங்களின் பிரகாரம் பிரமத பணிப்பாளரின் பதவிக்கான பதிலீட்டு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டவரின் காலத்தை நீடிப்பதற்கு பொது சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்கு பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. பொது சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி எதிர்பார்க்க வேண்டியிருந்தது. | |
| (இ) | சேவை தேவைப்பாடுகள் தொடர்பாக அமைச்சரவையின் அனுமதியை மேவுகை செய்யும் வகையில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்காக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தனர். அதற்காக அமைசடசரவையின் அனுமதி 2022 மே 12 இலும் பெறப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள தலைவரின் பதவியினை நியமிப்பதற்கான அதிகாரம் அமைச்சரவையின் பொறுப்பாகவிருப்பதால் அதனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை அனுமதி பெறப்பட வேண்டும். |